# நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல, கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள்

*ரோம 6:14 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.*
*கலா 5:18 ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.*
*கலா 3:24 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. ( 25 ) விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே.*

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!
*ரோமர் 8:32ல்* பவுல் அப்போஸ்தலன், தேவனுடைய மகாப்பெரிதான கிருபையினால், ஆவியின்படியே நடப்பவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என்று விளக்கும்போது இப்படியாக ஒரு கேள்வியை நம்முன் வைக்கிறார் " *தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?* ". இதற்கு சரியான பதில் " அவரோடு கூட மற்ற எல்லாவற்றையும் நிச்சயமாக அருளிச்செய்வார், அருளாதிருக்க முடியாது".

ஆனாலும், இயேசு கிறிஸ்துவை உண்மையாக சிநேகிக்கிற பல விசுவாசிகள், பல சமயங்களிலும் தோற்றுப் போனவர் களாக, பெலனற்றவர்களாக, இயலாதவர்களாக, உடைந்தவர்களாக, நோயில், துன்பத்தில், துக்கத்தில், வறுமையில், இன்னும் பலவிதமான பிரச்சினைகளோடும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் தேவனுக்கு பிரியமான ஒரு வாழ்க்கை வாழ முயற்சிக்கிறார்கள். அவர்கள் ஊழியத்துக்கு பணம் கொடுத்து, பலவித உதவிகள் செய்து, வசனத்துக்கு கீழ்ப்படிந்து, ஒழுங்காக ஆலயத்துக்கு சென்று ஜீவித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனாலும் பலவிதமான பிரச்சினைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு கூடுதல் முயற்சிக்கிறார்களோ, அவ்வளவு சோர்ந்து போகிறார்கள். பலவித மான தீர்மானங்கள் எடுத்தும் அவற்றை நிறைவேற்ற முடிவதில்லை. தேவனிடம் கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றையும் பலமுறை உடைத்து விடுகிறார்கள். ஒரு மூன்று அடி முன்னேறினால், நான்கு அடி சறுக்குவது போன்ற வாழ்க்கை. எப்போதும் மனதில் ஒரு குற்ற உணர்வு. தேவனுக்கு முன்பாக ஜெபம் செய்ய நிற்கும் போதெல்லாம், உடனே மனதில் செய்த பாவங்கள் எல்லாம் வெள்ளம் போல ஓடிவருகின்றன. நிறைவேற்றாத வாக்குறுதிகள் எல்லாம் நினைவுக்கு வருகின்றன. தேவனுக்கு முன்பு நிற்க தகுதி இல்லாதது போன்ற ஒரு குற்ற உணர்வு எப்போதும். சாத்தானுடைய எதிர்ப்புகளை சந்திக்கும் போது, தைரியமின்மை, நிச்சயமின்மை, வசனம் நம் மூலமாக கிரியை செய்யுமா என்ற சந்தேகம் போன்ற உணர்வுகளே மேலோங்கி நிற்கின்றன.

சிலரது உதவியோடு, சாத்தான் சபைக்குள் கொண்டு வந்த ஒரு உபதேசம் **"நடப்பது எல்லாம் ஒன்றில் தேவன் செய்வது அல்லது அவர் அனுமதிப்பது"**. இதன் மூலம் உலகத்தில் நடைபெறும் பல துன்பங்களையும், அழிவுகளையும், சாத்தான் கொண்டு வருகிற பிரச்சினைகளையும், தேவன் கொடுக்கும் தண்டனைகள் என்று நம்பி விடுகிறோம். ஆனாலும் சொல்லுகிறோம் **'நம் தேவன் அன்பானவர்'** என்று. **எது உண்மை?** ஏன் பலரும் தேவனுடைய வாக்குறுதிகளை நம்பாமல், நித்திய ஜீவனை நம்பாமல்,பெலனின்றி, நம்பிக்கையின்றி, குற்ற உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்? இவற்றுக்கு எல்லாம் ஒரு முக்கிய காரணம் **" நாம் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல, கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள்"** என்ற உண்மையை பலரும் அறிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல், ஒத்துக்கொள்ளாமல், பற்றிக்கொள்ளாமல் இருப்பது.

சில விசுவாசிகள் உறுதியாக பிடித்துக்கொண்டிருக்கிற பல உபதேசங்களும், சிலரது பிரசங்களிலிருந்து, போதனைகளில் இருந்து எடுக்கப்பட்டவைகளே. பல சமயங்களில் **"அவர் சொன்னார்"** என்பதே பல உபதேசங்களுக்கும் அடிஸ் தானமாக இருக்கிறது. இன்றைய பல போதனைகளும் **"நீங்கள் இதை இதை செய்தால், தேவனிடமிருந்து இவை இவை கிடைக்கும். செய்யாவிட்டால் அல்லது வேறு எதாவது செய்தால் தேவனிடமிருந்து தண்டனை கிடைக்கும்".** நியாயப்பிரமாணத்தின் ஏதாவது ஒன்றுக்கு கீழ்ப்படியுங்கள் அப்போது ஒரு ஆசீர்வாதம் கிடைக்கும், கீழ்ப்படியாவிட்டால் தேவனிடம் இருந்து தண்டனை கிடைக்கும். இவைகள் வேதாகம சத்தியங்கள்தான் என்றாலும், இவை மாத்திரமே வேதாகம சத்தியங்கள் அல்ல. கிருபை, இரக்கம், கிரியைகளினால் அல்ல விசுவாசத்தால் நீதிகரணம், கிரியைகளுக்கு பலன், விடுதலை, மீட்பு போன்ற பல அருமையான, விசேஷமான சத்தியங்கள் வேதாகமத்தில் உண்டு. போதிக்கும்போது, முழு வேதாகமத்தின் அடிப்படையில் போதிப்பதே முறையான போதனை.

அறியாமையினால், பலருக்கும், தேவன் எப்போதும் சுகமாக்குவாறா? நான் தேவ சமூகத்தில் நிற்க தகுதி உள்ளவனா? தேவன் உண்மையில் என்னை சிநேகிக்கிறாரா? தேவன் என்னை ஏற்றுக்கொள்ள நான் எந்த அளவுக்கு நீதிமானாக இருக்க வேண்டும்? என்னுடைய ரட்சிப்பை எப்போதும் பாதுகாத்துக்கொள்ள முடியுமா? எப்போதும் நான் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்க முடியுமா? - **என்பது போன்ற கேள்விகளுக்கு பதில் தெரிவதில்லை**. அவர்கள் எப்போதும் தேவனுடைய தண்டனைக்கு பயந்து ஜீவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

வெற்றி உள்ள விசுவாச வாழ்க்கை வாழ்வதற்கு, தேவனுடைய சித்தத்தை நம் வாழ்க்கையில் நிறைவேற்றுவதற்கு, தேவனுடைய அன்பில் நிறைந்து, பரிசுத்தமாக குற்ற உணர்வின்றி வாழ்வதற்கு, **" நாம் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல - கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள் "** என்ற தெளிவான வேதாகம சத்தியத்தின் அர்த்தத்தை நன்றாக புரிந்து கொள்வது அவசியமாகும்.

**இதைபற்றி நாம் படிக்கு முன்பு சில முக்கியமான காரியங்களை மனதில் கொள்ளுமாறு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பாய் வேண்டிக்கொள்கிறேன்.**

1. *"ரோம 3:8 நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக என்றும் சொல்லலாமல்லவா? நாங்கள் அப்படிப் போதிக்கிறவர்களென்றும் சிலர் எங்களைத் தூஷித்துச் சொல்லுகிறார்களே; அப்படிப் போதிக்கிறவர்கள்மேல் வரும் ஆக்கினை நீதியாயிருக்கும்.* **".** அப்.பவுல் "கிருபையினால் நீதி" என்ற உபதேசத்தை ரோமருக்கு எழுதும்போது, தேவனுடைய மகா பெரிய கிருபையை விளக்குகிறார். அப்படி விளக்கும்போது, நியாயப்பிரமாணத்தை கைக் கொள்ளுமாறு போதித்துக்கொண்டிருந்த சிலர், பவுல் அப்போஸ்தலன் "பாவம் செய்யலாம் என்று போதிக்கிறார்" என்று அவரைப்பற்றி தூஷித்து சொல்லுகிறார்கள். அப்படி சொல்லுகிறவர்களைப்பற்றி அவர் சொல்கிற வசனம் இது. இப்போதும் கிருபையை சரியாக நாங்கள் போதிக்கும் போது, " பாவம் செய்யலாம் என்று போதிக்கிறார்களா "? என்ற கேள்வி நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டு வாழுகிறவர்கள் மனதில் எழ வாய்ப்புண்டு. **வேதாகமம் ஒரு போதும் பாவம் செய்யலாம் என்று போதிப்பது இல்லை. நாங்களும் அப்படி போதிப்பது இல்லை. ஒரு போதும் பாவம் செய்யாதீர்கள். பாவத்தின் சம்பளம் மரணம்** ( துன்பம், துக்கம், நோய், இல்லாமை, குற்ற உணர்வு..... ). இதன் பின்னும் நாங்கள் " பாவம் செய்யலாம் என்று போதிக்கிறோம் " என்று யாராவது பேசுவார்களானால், அவர்கள் *ரோமர் 3;8* ஐ கருத்தில் கொள்ளுமாறு மிகத்தாழ்மையாக கேட்டுக்கொள்கிறோம்.
மேலும், **"இரட்சிப்பு"** என்ற நமது வேதபாடத்தில் இருந்து **"ஒரு விசுவாசி பாவம் செய்தால் என்ன நடக்கும்"** என்று தெளிவாக படித்து அறிந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

2. விசுவாச வாழ்க்கையின் அடிஸ்தான, முதல் உபதேசமான **"இரட்சிப்பு ( மறுபடியும் பிறத்தல் ) "** ஐப்பற்றி ஒரு தெளிவான புரிந்து கொள்ளுதல் இல்லாமல் "நியாயப்பிரமாணத்துக்கும் கிருபைக்கும் உள்ள தொடர்பு, வேறுபாடுகள்" போன்றவற்றை புரிந்து கொள்ள முடியாது. ஆகவே முதலில், **"இரட்சிப்பு" என்றால் என்ன? நாம் எப்படி, என்று, யாரால், எதற்காக, ஏன் இரட்சிக்கப்பட்டோம் ? இயேசு எவ்வாறு என்னை இரட்சித்தார் ? இயேசு என்னை இரட்சித்த போது பாவங்கள் எப்போது மன்னிக்கப்பட்டன ? எவ்வளவு பாவங்கள் மன்னிக்கப் பட்டன? யாருடைய பாவங்களை இயேசு சுமந்தார்?** மறுபடியும் பிறந்த பிறகு ஒரு பாவம் செய்தால் என்ன நடக்கும்? **எந்த பாவம் நரகத்துக்கு அழைத்து செல்லும்? எந்த பாவம் பெரியது, எந்த பாவம் சிறியது? இரட்சிப்பில் எனக்கு என்ன என்ன கிடைத்திருகிறது, இன்னும் என்ன என்ன கிடைக்க வேண்டும்** என்பனவற்றை சரியாக படித்து அறிந்து கொள்ளவும்.

3. இந்த வேதபாடம், பலருக்கும் இதற்கு முன்பாக வழக்கமாக கேட்டிராத ஒரு வேதபாடமாக இருக்கலாம். அதனால் ஒருவேளை ஏதேனும் சந்தேகங்கள் எழுந்தால் உடனடியாக தாராளமாக என்னை தொடர்பு கொள்ளவும். உங்கள் சந்தேகங்கள் எதுவாக இருந்தாலும் அன்பாக பதில் கூற அடியேன் ஆயத்தமாக இருக்கிறேன். நீங்கள் சமயம் ஒதுக்கி தருவதாக இருந்தால், உங்களை நேரடியாக சந்தித்து விளக்கம் தரவும் ஆயத்தமாக இருக்கிறேன். என்னிடம் பேசியும் பதில் கிடைக்காவிட்டால் நீங்கள் மற்றவர்களிடம் தாராளமாக கேட்டுக்கொள்ளலாம்.

4. நியாயப்பிரமாணத்தின் காலத்தையும், கிருபையின் காலத்தையும் பற்றி சரியாக அறிந்து கொள்ள, வேதாகமத்தில் இருக்கும் பல **ஆட்சி முறைக்காலங்களை ( Biblical Dispensations )** பற்றியும், ஒவ்வொரு ஆட்சி முறைக்காலத்தில் இருந்த **"உடன்படிக்கைகளை"** ப்பற்றியும் படித்துக்கொள்வது நல்லது ( நீங்கள் விரும்பினால் எமது வேதபடிப்புக்களாகிய **"வேதாகம ஆட்சி முறைக்காலங்கள்", "வேதாகம உடன்படிக்கைகள்", "புதிய உடன்படிக்கை",** ஆகிய வேதபாடங்களை படிக்கவும்).

5. *மத் 5:19 ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்.*
நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டளைகள் ஒன்றும் மோசமானவைகள் அல்ல. அவைகள் அனைத்தும் நல்லவைகள். ஆகவே நியாயப்பிரமாணத்தைப்பற்றி அரை குறை அறிவோடு, "நாம் கிருபைக்குள் இருப்பதனால், நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள தேவை இல்லை, எப்படியும் ஜீவிக்கலாம்" **என்று ஒருவரும் நினைக்ககூடாது, அவ்வாறு போதிக்கவும் கூடாது.** அது வேதாகமத்துக்கு எதிரானது. தேவன் எதற்காக நியாயப்பிரமாணத்தை கொடுத்தாரோ அதற்காக நியாயப்பிரமாணத்தை உபயோகிப்பது நல்லது *( 1 தீமோ 1:8-9; ரோமர் 7:12-13; 3:31 ).* நியாயப்பிரமாணத்தின் கட்டளைகள் தேவனுடைய நீதியின் நிலையை குறிக்கின்றன. ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவனுடைய நிலை என்ன என்பதை அவை காட்டுகின்றன. ஆகவே எந்த ஒரு இரட்சிக்கப்பட்ட விசுவாசியும் தன்னால் இயன்ற அளவுக்கு நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை கைக்கொண்டு நடக்க வேண்டும். அப்போது மனிதருக்கு முன்பாக ஒரு நல்ல சாட்சியாகவும், சாத்தானுக்கு நம் வாழ்க்கையில் இடம் கொடாமலும் ஒரு விசுவாசியினால் வாழ முடியும்.
அதனால்தான் இயேசு இங்கே என்ன சொல்லுகிறார் என்றால், **" கற்பனைகளை மீறி நடந்தும், கற்பனைகளை மீறலாம் என்றும் யாரும் போதிக்கக்கூடாது. அப்படி செய்பவர்களும், போதிப்பவர்களும், பரலோக ராஜ்யத்துக்குள் இருந்தாலும் அவர்கள் சிறியவர்களாக எண்ணப்படுவார்கள்".**
ஆனால் இயேசு இங்கே **" இரட்சிக்கப்படுவதற்கு, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு, விசுவாசத்தால் வரும் நீதியை பெற்றுக்கொள்வதற்கு, நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டு வாழ வேண்டும் " என்று சொல்ல வில்லை.** நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டு வாழுவது நல்லது. ஆனால் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதால் நீதிமானாகி விடலாம் என்று நடப்பதும், போதிப்பதும் தவறு.

6. **கிருபைக்குள் இருக்கும் ஒரு விசுவாசி பாவம் செய்யக்கூடாது** *( ரோமர் 3:8; 6:1; 6:15 )*

*ரோம 6:15 இதினால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா? கூடாதே.*

இந்த வேதபாடத்துக்குள் செல்லு முன்பாக, **"மறுபடியும் பிறந்த, இரட்சிக்கப்பட்டிருக்கின்ற ஒரு விசுவாசி மீண்டும் எதாவது ஒரு பாவம் செய்தால் என்ன நடக்கும்?"** என்று அறிந்து கொள்வோம்.

**1.பாவம், சாத்தான் ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் தாராளமாக நுழையும் படியாக ஒரு வாசலை திறந்து கொடுக்கிறது.** *ரோம 6:15 இதினால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா? கூடாதே. 16 மரணத்துக்கேதுவான பாவத்துக் கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?*

*யோவா 10:10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.*

*ரோம 6:23 பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.*

பாவம் சாத்தானுக்கு வழி திறந்து கொடுத்து ஒரு விசுவாசியை - சரீரப்பிரகாரமாக, மனோரீதியாக, மனதளவில், ஆவிக்குரிய பிரகாரமாக - அழிக்கும்படியாக வழி திறக்கும். பாவத்தால் விசுவாசி சாத்தானின் அடிமையாவார். சாத்தான் அதனால் விசுவாசியின் வாழ்வில் குறைவை, அழிவை, மரணத்தை கொண்டு வரலாம்.

**2.ஒரு விசுவாசி பாவத்தினால், மறைமுகமாக தேவனுடைய கோபாக்கினைக்குள் விழ நேரிடும்.**

*வெளி 18:4 பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.*

*எண் 16:26 அவன் சபையாரை நோக்கி: இந்தத் துஷ்ட மனிதரின் சகல பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளப்படாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களை விட்டு விலகி, அவர்களுக்கு உண்டானவைகளில் ஒன்றையும் தொடாதிருங்கள் என்றான்.*

தேவனுடைய கோபாக்கினை அவரது விரோதிகளுக்கு நேராக இருக்கிறது, ஆனாலும் நாம் தேவனுடைய விரோதிகளுடன் இருந்தால், நாமும் அந்த கோபாக்கினைக்குள் அகப்பட நேரிடும். இதற்கு ஒரு நல்ல உதாரணம் "லோத்து". **எனவே ஒரு விசுவாசி எந்த வகைப்பாவத்துக்கும் விலகி இருக்க வேண்டும்.**

**3.ஒரு விசுவாசி பாவத்தினால் தேவனுக்கு உபயோகமான பாத்திரமாக இருக்க முடியாது**

*2தீமோ 2:20 ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள்.*
*2தீமோ 2:21 ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்.*

**4. ஒரு விசுவாசி பாவத்தின் வஞ்சனையினால் கடினப்பட்டு போக முடியும்**

*எபி 3:13 உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். 14 நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்.*

ஒரு விசுவாசி தொடர்ந்து ஒரு பாவத்தை செய்து கொண்டிருந்தால், அதை அப்படியே விட்டால் அது சில காலங்களுக்குள் நம் இருதயத்தை கடினப்படுத்தி விடும். இதனால் அவ்விசுவாசி அவரது ரட்சிப்பை கை விட நேரிடலாம். **ரட்சிப்பை தவற விட முடியாது, ஆனால் கை விடலாம்.**

**5.விதைத்தலும் அறுத்தலும்:** ***கலா 6:7-8.***

மாம்சத்துக்கென்று விதைப்பது என்றால், பரிசுத்த ஆவிக்கு கீழ்ப்படியாமல் நடந்து கொள்வது. நம்முடைய செயல்களே நாம் விதைப்பது. ஒரு விசுவாசி பரிசுத்த ஆவிக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்து கொண்டிருக்கிறார் என்றால் அவர் மாம்சத்துக்கு விதைக்கிறார் என்று பொருள். அது இந்த நியமத்தின் படி அழிவை கொண்டு வரும்.

**6. விசுவாசியின் பாவம், ஒரு அவ்விசுவாசி தேவனை சந்திப்பதற்கு பெரிய தடையாக இருக்கும், பலர் வீழ்ந்து போக ஏதுவாக இருக்கும்.**

*எபி 12:12 ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, 13 முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள். 14 யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. 15 ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும், 16 ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.*

7. விசுவாசி பாவம் செய்யும்போது அது அவருக்கு என்று நியமிக்கப்பட்டிருக்கும் தேவ தூதர்கள் கிரியை செய்ய ஏற்ற சூழ்நிலையாக இருக்காது *( எபி 1:14 ).*

8. விசுவாசியின் பாவம், பரிசுத்த ஆவியானவர் முழுமையாக கிரியை செய்ய முடியாதபடி அவரை துக்கப்படுத்தி தடுத்துவிடும் *( 1 தெச 5:19; அப் 5:9; கலா 5:16; எபே 4:25-31 )*

**இவைகள் தவிர இன்னும் எண்ணற்ற பிரச்சினைகளை பாவம் கொண்டு வரும் *(ரோமர் 6:23 ).* எனவே எவ்விதத்திலும் அழிவு, துன்பம், நோய்,மரணம், குற்ற உணர்வு இவற்றை பாவம் கொண்டு வரும். மாத்திரமல்ல, அதை தொடர்ந்தால், அது நம் இதயத்தை கடினப்படுத்தி நம் ரட்சிப்பை கைவிட வைக்கும். ஆகவே ஒரு விசுவாசி எவ்வகையான பாவத்துக்கும் விலகி இருக்க வேண்டும். பாவம் கொடியது.**

## 1.நியாயப்பிரமாணத்தைப்பற்றி புதிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில வசனங்கள்.

*யோவா 1:17 எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.*

*அப் 13:39 மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது.*

*அப் 15:24 எங்களால் கட்டளைபெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்தசேதன மடையவேண்டுமென்றும், நியாயாப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்றும் சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளால் உங்களைக் கலக்கி, உங்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டபடியினாலே,*

*அப் 15:28 எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்கவேண்டுமென்பதே. 29 அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள்.*

*ரோம 3:20 இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.*

*ரோம 3:28 ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்.*

*ரோம 6:14 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.*

*ரோம 7:6 இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதனின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.*

*ரோம 10:4 விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.*

*1கொரி 15:56 மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்.*

*கலா 2:15 புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம். 16 நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே.*

*கலா 2:21 நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.*

*கலா 3:10 நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே. 11 நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. 12 நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான். 13 மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.*

*கலா 4:4 நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, 5 காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.*

*கலா 5:4 நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.*

*கலா 5:18 ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.*

*எபே 2:15 சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,*

*யாக் 2:10 எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்.*

*1தீமோ 1:9 எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல், அக்கிரமக்காரருக்கும், அடங்காதவர்களுக்கும் பக்தியில்லாதவர்களுக்கும் பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும், தாய் தகப்பன்மாரை*

*அடிக்கிறவர்களுக்கும், கொலைபாதகருக்கும், 10 வேசிக்கள்ளருக்கும், ஆண்புணர்ச்சிக்காரருக்கும், மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்யருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும், 11 நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது.*

## 2. நியாயப்பிரமாணம். வார்த்தை படிப்பு.

W.E.வைன் எழுதிய வேதாகமவார்த்தைகளின் விளக்கம்.

கிரேக்க வார்த்தை; **"நெமோஸ்".** இதன் அர்த்தம் பகிர்ந்து கொடுப்பது, பிரித்து கொடுப்பது. ஒரு நோக்கத்துக்காக கொடுக்கப்பட்டது. " ஒரு தேசத்தால், அதன் மக்களை நீதியாக ஆளுவதற்காக உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்கள்".

புதிய ஏற்பாட்டில், கீழ்க்கண்ட விதத்தில் இவ்வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

**அ.** *ரோமர்; 2;12,13, 3;27, 4;15, 5;13, 7;1 கலா; 5;23* போன்ற இடங்களில் ஒரு பொதுவான பிரமாணமாக.

**ஆ.** *ரோமர்; 7;21,23* போன்ற இடங்களில் " கிரியை செய்ய தூண்டுகிற ஒரு சக்தியாக ".

**இ.** *மத்;5;18, யோவான்; 1;17, ரோமர்; 2;15,18,20,26,27, 3;19, 4;15, 7;4,7,14,16,22, 8;3,4,7 கலா;3;10,12,19,21,24, 5;3 எபே;2;15, பிலி;3;6 1 தீமோ;1;8 எபிரே;7;19 யாக்;2;9. ரோமர்; 2;14, 5;20, 7;9, 10;4 1 கொரி; 9;20 கலா;2;16,19,21, 3;2,5,10,11,18,23 4;4,5,21 5;4,18 6;13 பிலி;3;5,9 எபி;7;16, 9;19 யாக்;2;11, 4;11 கலா; 2;16....* போன்ற இடங்களில் மோசேயின் நியாயப்பிரமாணமாக.

**ஈ.** நியாயப்பிரமாணத்தை உட்கொண்டிருக்கிற ஆகமங்களை குறிக்கும்படியாக.

1. முதல் ஐந்து ஆகமங்களை குறிப்பதாக; *மத்; 5;17, 12;5 லூக்; 16;16 24;44 யோவா 1;45 ரோமர்; 3;21 கலா; 3;10*
2. சங்கீதங்களை குறிப்பதாக; *யோவான்; 10;34 15;25*

**மற்ற வார்த்தைகள்**

1. **இயேசுவின் பிரமாணம்.** *கலா; 6;2.* இயேசு கொடுத்த கட்டளைகள் (மலைப்பிரசங்கம், *யோவா 13;14,15. 15;4 )* அல்லது இயேசு வாழ்ந்த கோட்பாடுகள். *மத்;20;28, யோவான்; 13;1.*
2. **விசுவாசப்பிரமாணம்;** *ரோமர்; 3;27.* மனிதனுடைய பக்கத்திலிருந்து விசுவாசத்தை மாத்திரம் கேட்கிற கோட்பாடு.
3. **மனதின் பிரமாணம்;** *ரோமர்; 7;23.* மறுபடியும் பிறந்ததால், புதிய சுபாவத்தை ஆளுகை செய்கிற பிரமாணம்.
4. **பாவப்பிரமாணம்;** *ரோமர்; 7;23.* நாம் நல்லதை செய்ய நினைத்தாலும், பாவம் தன்னுடைய ஆதிக்கத்தையும் பெலத்தையும் செலுத்துகிற கோட்பாடு.
5. **சுயாதீனப்பிரமாணம்;** *யாக்; 1;25, 2;12.* எல்லா தேவ வசனங்களையும் உள்ளடக்கிய வார்த்தை. இது நமது ஆதரவு இன்றி வெளியில் இருந்து நம்மை ஆளுகிற சட்டம் அல்ல, மாறாக சந்தோஷமாக, சுயமாக கீழ்ப்படிகிற, பிரமாணம்.
6. **ராஜரீக பிரமாணம்;** *யாக்;2;8.* அன்பின் பிரமாணம். அதன் ராஜ சக்தியினால். மற்ற எல்லா பிரமாணங்களும் இதில் அடங்கி இருக்கின்றன.
7. **ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்.** *ரோமர்; 8;2.* பரிசுத்த ஆவி, ஜீவனை கொடுப்பதற்காக உபயோகிக்கும் கோட்பாடு.

**ஸ்டிராங் சொல் அகராதி;** பொட்டலமாக்குவது, அளவுகளாக உபயோகிப்பது, பொதுவான நடத்தைகள், மோசேயினுடையது..

**வெப்ஸ்டர் சொல் அகராதி;** ஒரு சமுதாயம், தன் மக்களை கட்டுப்படுத்துதாக வைத்திருக்கிற சட்டங்கள். பாரம்பரியமாகவோ அல்லது ஒரு பிரகடனத்தாலோ.

**இந்த வேதாக படிப்பில், நியாயப்பிரமாணம் என்பது - மோசேயின் நியாயப்பிரமாணத்தை ( பத்து கட்டளைகள், நியாயத்தீர்ப்புகளை, தண்டனைகளை, ஆசாரிய அனுசரிப்புகளை உள்ளடக்கியதாக ) குறிக்கிறது.**

## 3. யார் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல?.

இயேசு கிறிஸ்துவை, தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறந்து, இரட்சிக்கப்பட்ட அனைவரும். *ரோமர் 1:7;; 6:2-6; 7:1-6; யோவான் 5:45; 3:18.*

வரப்போகும் கோபாக்கினையில் இருந்து இயேசு நம்மை விடுவித்திருக்கிறார் *( மத் 3:7; ரோமர் 5:9; 1 தெச 5:9; வெளி 6:17; 11:18).* ஆனால், இப்போதும், நியாயப்பிரமாணத்தின் சாபம் என்ற ஒரு கோபாக்கினை இருக்கிறது *(கலா 3:13).* ஆனாலும் இயேசு கிறிஸ்து இந்த கோபாக்கினையில் இருந்தும் நம்மை விடுவித்திருக்கிறார் *( யோவான் 3:36; ரோமர் 4:15; 2 கொரி 3:9; யோவான் 3:36 ).*

## 4.யார் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள்?

இயேசுகிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல், மறுபடியும் பிறக்காமல், இரட்சிக்கப் படாமல் இருக்கும் அனைவரும். *(யோவான் 3:18; 5:45).* இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படாமல் இருப்பவர்கள் இப்போது நியாயப்பிரமாணத்தின் கோபாக்கினைக்கு உட்பட்டு இருக்கிறார்கள் *( யோவான் 5:45; ரோமர் 4:15; கலா 3:10; யோவான் 3:18).* இவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படாவிட்டால் தேவனுடைய கோபாக்கினைக்குள்ளாக நித்தியகாலமாக உபத்திரவப்படுவார்கள்.

## 5. தேவன் ஏன் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார்?

*ரோம 5:13 நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.*
*ரோம 4:15 மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது, நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை.*

வேதாகமத்தில், தேவன் மனிதனோடு உறவாடிய பல வழிகளை அல்லது பல யுகங்களை காணலாம். *( 1 கொ;9;17. எபே; 1;10, 3;12, கொலோ;1;25 ).* வேதாககம் சொல்லுகிறது, **" நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்பட மாட்டாது ".** நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு மனிதனுடைய பாவங்கள் அவர்களுக்கு எதிராக கணக்கிடப்படவில்லை. அதனால்தான் ஆபேலை கொன்றதற்காக காயீன் கொல்லப்படவில்லை. இரண்டு பேரை கொலை செய்ததற்காக லாமேக்கு கொல்லப்படவில்லை. ஆபிரகாமும், யாக்கோபுவும் தங்கள் தங்கள் ஒன்று விட்ட சகோதரியை திருமணம் செய்ததற்காக கொல்லப்படவில்லை. *( லேவி;18 ).* பார்வோனோடு பொய் சொன்ன தற்காக ஆபிரகாம் தண்டிக்கப்படவில்லை. தேவன் இவைகளைப்பற்றியதான கட்டளைகளை கொடுக்க வில்லை. எனவே மனிதன் முழுமனதோடு மீறுதல் செய்ததாக எடுக்கப்படவில்லை.

பலரும் நம்புகிறார்கள் ( எனென்றால் அவர்கள் அவ்வாறாக கற்பித்துக்கொடுக்கப்பட்டதால் ) "ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததால், அவர்களோடு உறவாட முடியாமல், தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து தண்டனையாக துரத்தி விட்டார்" என்று.

**மனிதன் பாவம் செய்த பிறகு என்ன நடந்தது என்று பார்ப்போம்.**

*ஆதி 3:21 தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார். 22 பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத் தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, 23 அவன் எடுக் கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பி விட் டார். 24 அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.*

தேவன் ஏன் ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றினார் என்று இந்த வசனங்கள் தெளிவாக சொல்லுகின்றன. **அவர்கள் பாவம் செய்ததனால் அவர்கள் தன் முன்பாக நிற்பதை தேவனால் பொறுக்க முடியாது என்பதனால் அல்ல. அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியை புசித்து என்றென்றேக்கும் உயிர்வாழாமல் இருக்கும்படியாக.** இது ஒரு தண்டனை அல்ல. மனிதர்கள் பலவிதமான வியாதிகளோடு, கேன்சர், தொழுநோய் போன்ற வியாதிகளோடு, மரிக்காமல் என்றென்றேக்கும் உயிரோடு இருக்கும் காட்சியை எண்ணிப்பாருங்கள். பாவத்தில் வீழ்ந்த மனிதன் என்றென்றேக்கும் உயிர் வாழாமல் இருப்பது ஒரு ஆசீர்வாதமாகும். தேவன் நமக்காக மிக நல்லதை வைத்திருக்கிறார், அதன் மூலம் நாம் ஒரு மகிமையான சரீரத்தை பெறுவோம். அந்த சரீரத்துக்கு ஒரு போதும் வேதனை, துன்பம், நோய் இல்லை.

ஆதியாகமம் நான்காம் அதிகாரத்தில், தேவன் மனிதனோடு உறவாடி நடப்பதை காணமுடியும். தேவன் மனிதனை தன் சமூகத்தை விட்டு துரத்த வில்லை. காயீன் கர்த்தருடைய **சந்நதியை விட்டு** புறப்பட்டான் *( ஆதி; 4;16 ).* **புறப்பட்டான்** என்றால் அதற்கு முன்பு அங்கே இருந்தான் என்பதே அர்த்தம். ஏதேன் தோட்டத்தை விட்டு மனிதன் வெளியேற்றப்பட்ட பிறகும் தேவன் அவர்களோடே இருந்தார்.

**ஜலப்பிரளயம்;** தேவன் தன் நொடிப்பொழுது கோபாக்கினையாக ஜலப்பிரளயத்தை கொடுத்தார். ஆனாலும் ஜலப்பிரளயம் கூட தேவனுடைய அன்பின் ஒரு வெளிப்பாடே. எனென்றால் பாவம் மிகவும் கோடூரமாகி, பூமியில் தேவனுடைய சொல் கேட்பவர்களாக எட்டு பேர் மாத்திரமே மிஞ்சினார்கள். தேவன் இப்படி ஒரு செயலை செய்யாமல் இருந்திருந்தால், தேவனுக்கு கீழ்ப்படிந்தவர்களாக பூமியில் யாரும் இல்லாமல் இருந்திருப்பார்கள், நமக்கான மீட்பின் திட்டம் செயல் படுத்தப்பட்டிருக்க முடியாது. தேவன் தன் அன்பினால் பூமியில் வாழ்ந்தவர் களுக்கும், வாழப்போகிறவர்களுக்கும் இந்த மீட்பின் திட்டத்தை வைத்திருந்தார். இந்த திட்டதை செயல் படுத்தப் போகிறவர் இயேசு கிறிஸ்து. அவர் சீரழிந்த மரபில் இருந்து பிறக்காத ஒரு பெண் மூலமாகவே பிறக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவை கர்ப்பப்பையில் சுமக்கப் போகிற பெண், தேவனுக்கு கீழ்ப்படிந்து பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிக்கும்படியாக அனுமதிக்கிற பெண்ணாக இருக்க வேண்டும். தேவன் ஜலப் பிரளயத்தை அனுப்பாமல் இருந்திருந்தால் இயேசு கிறிஸ்து பிறக்க தகுதி யான ஒரு கன்னிகை பூமியில் இல்லாதிருந்திருப்பாள். ஏனென்றால் அந்த அளவுக்கு பூமியில் பாவம் கொடூரமாக இருந்தது.

சோதோம் கொமாரா பட்டணத்துக்கு நேர்ந்தவற்றுக்கும், தேவன் சில இடங்களில் எல்லா மனிதரையும் கொலை செய்யும் படியாக சொல்லுவதற்கும் காரணம் இதுவே. இது ஒரு சரீரத்திலிருந்து அழுகிப்போன பகுதியை வெட்டி, அதன் மூலம் மற்ற பகுதிகளை காப்பாற்றுவது போன்றதாகும். இவை தேவனுடைய கோப நியாயத்தீர்ப்புகள் என்றாலும், உங்களையும் என்னையும், வருங்கால சந்ததியையும் மீட்கும்படியாக அவர் செய்தவைகள். இவை அனைத்தும் அவரது இரக்கத்தின், அன்பின் செயல்களே.

**பாவத்தின் விளைவுகள்;** தேவன் பாவத்தை கணக்கிடவில்லை என்றாலும், ஆதியிலிருந்தே பாவத்தினால் மனுக் குலம் மிக கொடிய விளைவுகளை சந்திக்க வேண்டியதிருந்தது. பாவம் தேவனுக்கெதிரான மீறுதல் மாத்திரமல்ல, அது,சாத்தான் ஒரு மனிதனின் வாழ்க்கையில் நுழையும் படியாக ஒரு வாசலை திறந்து கொடுக்கிறது.

*ரோம 6:16 மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?*

*யோவா 10:10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.*

பாவத்துக்கு **இரண்டு விளைவுகள்** உண்டு. **1. செங்குத்து விளைவு.** இது தேவனுக்கு எதிரான மீறுதல்.

**2. பக்கவாட்டு விளைவு.** இது சாத்தானுக்கு நம் வாழ்க்கையில் நுழைய வழி வகுத்துக்கொடுப்பது.

பாவம் சாத்தானுக்கு வழி திறந்து கொடுத்து மனித குலத்தை - சரீரப்பிரகாரமாக, மனோரீதியாக, மனதளவில், ஆத்மீக பிரகாரமாக - அழித்துக்கொண்டிருந்தது. இதைப்பற்றி மனிதனுக்கு ஒருவித அறிவும் இல்லாதிருந்தது. பாவம் மிகவும் கொடூரமாக வளர்ந்து கொண்டிருந்தது. எனவே மனுக்குலம் பாவத்தின் விளைவுகளை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, தேவன் நியாயப்பிரமாணத்தை மோசே மூலமாக கொடுத்தார்.

## 6. நியாயப்பிரமாண யுகம்.

நியாயப்பிரமாண யுகம் தற்காலிகமானதாகும். நிரந்தரமானதல்ல.

*கலா 3:19 அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது.*

*கலா 3:24 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. 25 விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே.*

*ரோம 10:4 விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.*

**நியாயப்பிரமாணத்தின் தொடக்கம்.** *யோவா 1:17 எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.*

**நியாயப்பிரமாணத்தின் முடிவு.** *லூக் 16:16 நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கிவந்தது; அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்;. ( மத்;11;13 )*

**நியாயப்பிரமாண யுகத்தின் காலம்;** *யாத்திராகம் 20 ம்* அதிகாரத்திலிருந்து யோவான் ஸ்நாபகனுடைய ஊழியம் *மத்;11;13* வரை. சுமார்; **1718 வருடங்கள்**. ( டேக்ஸ் வேதாகம விளக்கவுரை ).

## 7. நியாயப்பிரமாணத்துக்கான தேவனுடைய நோக்கம்

*ரோம 3:19 மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம். 20 இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.*

நியாயப்பிரமாணத்தின் நோக்கம் **" குற்ற உணர்வை உருவாக்குவது ".** இன்றைய பல விசுவாசிகளைப்போன்றே, பவுல் அப்போஸ்தலனுடைய காலத்து யூதர்களும், நியாயப்பிரமாணத்தின் படி நடந்து ரட்சிப்பை பெற்றுக்கொள்வதற்காகவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைத்தார்கள். ஆனால் நியாயப் பிரமாணத்தின் நோக்கம் அதுவல்ல. நீதிகரணத்தை உருவாக்குவதற்காக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட வில்லை.

நியாயப்பிரமாணம் கொல்லுவதற்காக *( 2 கொரி;3;7 ),* ஆக்கினைதீர்ப்புக்காக *( 2 கொரி; 3;9 )* கொடுக்கப்பட்டது. நியாயப்பிரமாணம் பாவத்துக்கு பெலன் கொடுத்தது *(1 கொரி;15;56)* பாவத்துக்கு உயிர் கொடுத்தது *( ரோமர்;7;9 ).* நியாயப்பிரமாணம் பாவத்துக்கு சமயம் கொடுத்து நம்மை வஞ்சிக்க, சகல வித இச்சைகளையும் நம்மில் நடப்பிக்க செய்தது *( ரோமர்; 7;8,11 ).* சுருக்கமாக சொன்னால், நியாயப்பிரமாணம், நம் விரோதியாகிய பாவத்தை வலுப்படுத்தியது, நம்மையல்ல.

நம்முடைய விரோதியை வலுப்படுத்தும் ஒன்றை ஏன் தேவன் கொடுக்க வேண்டும்? ஏனென்றால் பாவம் ஏற்கனவே நம்மை வீழ்த்தி விட்டதை மனிதன் அறியாமல் இருந்தான். மனிதன், "தான் பூரணமானவன் அல்ல என்றாலும் தன் பாவங்கள் அவ்வளவு மோசமானவை அல்ல" என்று நினைக்குமாறு வஞ்சிக்கப்பட்டிருந்தான். தான் நல்லவன் தான் என்று நினைத்துக்கொண்டிருந்தான். ஆனால் தேவன் ஒரு வளை கோட்டில் மார்க்கு கொடுப்பவர் அல்ல. நாம் மற்றவர்களை விட நல்லவர்கள் என்பது ஒரு விஷயமே அல்ல. எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமை அற்றவர் களாகி *( ரோமர்; 3;23 ),* பாவத்தின் சம்பளம்( எந்த பாவமானாலும் ) மரணம் *( ரோமர்; 6;23 ).* தாங்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுமளவுக்கு நல்லவர்கள், என்ற ஒரு பொய் நம்பிக்கையை மனிதர் வைத்திருந்தனர். இதை உடைக்க வேண்டுமென்பதற்காக தேவன் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார். இதை ஏற்றுக் கொள்பவர்களுக்கு புரியும், 'இந்த நியாயப்பிரமாணத்தின் படியான பரிசுத்த பூரணத்தையே தேவன் ஏற்றுக்கொள்வார் என்றால், யாரும் அவர்களது சுய பரிசுத்தத்தால் ரட்சிக்கப்பட முடியாது.'

இதுவே தேவனுடைய நோக்கமாக இருந்தது. யாரும் நியாயப்பிரமாணத்தின் படி நடந்து ரட்சிக்கப்பட முடியாது, எனென்றால் எல்லோரும் பாவம் செய்து நியாயப்பிரமாணத்தின் பரிபூரணத்தில் இருந்து குறைவுபட்டவர்களே.

**ஆகவே நியாயப்பிரமாணம் நம் எல்லா சாக்கு போக்குகளையும் உரிந்து, நம்மை தேவனுக்கு முன்பாக குற்றவாளி களாக்கியது. நாம் எப்படிப்பட்ட பாவிகள் என்ற அறிவை நமக்கு தந்தது. அதன் மூலம் - நாம் மற்றவர்களோடு ஒப்பிடும்போது நல்லவர்கள் அதனால் ரட்சிக்கப்படுவோம் என்ற பொய் நம்பிக்கையை நீக்கியது.**

ஒருவேளை நீங்கள் எப்போதும் குற்ற உணர்வு உள்ளவர்களாக இருப்பீர்களானால், நீங்கள் அதை நியாயப் பிரமாணத்தின் மூலம், நியாயப்பிரமாண போதனைகளின் மூலம், பெற்றுக்கொண்டீர்கள். நியாயப்பிரமாணம் உங்களை குற்ற உணர்வு உள்ளவர்களாக ஆக்கும். இங்கே நாம் குற்றஉணர்வையும் பரிசுத்த ஆவியின் உணர்த்துதலையும் குழப்பக்கூடாது. நாம் தேவனுக்கு

பிரியமில்லாதது எதையாவது செய்யும்போது, பரிசுத்த ஆவியானவர் உணர்த்துவார். அந்த உணர்த்துதல் எப்போதும் நம்மை தேவனுடைய வழிகளில் நடத்தும். ஆனால் குற்ற உணர்வோ, நம்மை தேவனோடு நெருங்கி இருப்பதில் இருந்து அகற்றி நம்மை நம்பிக்கையற்றவர்களாக ஆக்கும்.

*ரோம 5:20 மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது: அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று.*

**நம் மீறுதல் பெரிதாகும்படி நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது**. அதன் மூலம் தேவன் நம்மை மேலும் வெறுப்பார் என்பதற்காக அல்ல, மாறாக நம்முடைய பாவங்கள் எவ்வளவு கொடூரமாக இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்வோம் என்பதற்காக. அதனால், நம்முடைய சுய நற்செயல்களால் தேவனுக்கு பிரியமாக இருக்க முயற்சிப்பதை நாம் கைவிட வேண்டும் என்பதற்காக. **நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது பாவம் பெருக அல்லது பெரிதாக.** நியாயப்பிரமாணத்தின் நோக்கம், பாவத்துக்கெதிரான போரில் நம்மை பெலப் படுத்துவதற்காக அல்ல, மாறாக நமக்கெதிரான போரில், பாவத்தை பெலப்படுத்துவதற்காக. நியாயப்பிரமாணம் பாவத்துக்கு அந்த அளவு அதிகாரம் கொடுத்தது, கிருபையை தவிர நமக்கு வேறு வழியே இல்லை.

**"நியாயப்பிரமாணம் வந்தது".** அதாவது அது முன்பு இல்லாமல் இருந்தது. அது தேவனுடைய ஆதி திட்டத்தில் இல்லாமல் இருந்தது. பின்பு கூட கொண்டுவரப்பட்டது. கூட்டப்பட்டது. ( *கலா 3:19* ).

*ரோம 7:7 ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே.*
*8 பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே.*
*9 முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன்.*

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் **"பாவம் மரித்ததாயிருந்த"** ஒரு சமயம் உண்டு. பின் ஒரு சமயம் அவன் நன்மை தீமை யை பற்றிய அறிவை பெற்றுக்கொள்கிறான், அத்தோடு நியாயப்பிரமாணம் அவனுடைய அறிவுக்கு வருகிறது. பாவம் முன்பும் இருந்தது. ஆனால் அது அவனை ஆளுகை செய்யவோ அவனை கட்டுப்படுத்தவோ செய்யவில்லை. பாவம் மரித்ததாக இருந்தது. எப்போது அவனுக்கு நியாயப்பிரமாணத்தை பற்றிய அறிவு வந்ததோ, அப்போது அவனுக்கு தேவனுடைய பரிபூரணமான பரிசுத்தத்தின் அளவு நிலை புரிந்தது. அப்போது தான் எப்படிபட்ட பாவி என்று மனிதனுக்கு புரிய வந்தது. இச்சை என்பதன் அர்த்தம் கட்டுப்பாடு இல்லாத ஆசை அல்லது விருப்பம். நியாயப்பிரமாணம் உண்மையில் ஒரு மனிதனிடமிருந்து இந்த கட்டுப்பாடு இல்லாத ஆசையை வெளியே கொண்டு வந்தது. நியாயப்பிரமாணம்," இச்சியாதிருப்பாயாக" என்று சொல்லும்போது, நாம் நம்மை ஒரு இச்சிக்கின்ற பைத்தியமாக பார்ப்போம். **இது போல நியாயப்பிரமாணம் நம்முடைய பாவத்தை வெளிக்கொணர்ந்து, உயிர் கொடுத்து அதன் பிறகு அதற்காக நம்மை குற்றப்படுத்துகின்றது.**

*ரோம 7:12 ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது.*
*13 இப்படியிருக்க, நன்மையானது எனக்கு மரணமாயிற்றோ? அப்படியல்ல; பாவமே எனக்கு மரணமாயிற்று; பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும், அது நன்மையானதைக் கொண்டு எனக்கு மரணத்தை உண்டாக்கினதினாலே, பாவமாகவே விளங்கும்படிக்கும் அப்படியாயிற்று.*

நியாயப்பிரமாணம் ஏற்கனவே இருந்ததை வெளிக்கொண்டு வந்தது, இதன் மூலம் **நாம் எப்படிப்பட்ட பாவிகள் என்று பார்த்து, நமக்கு ஒரு ரட்சகர் தேவை என்று புரிந்து கொள்கிறோம்.** பாவத்தின் வஞ்சக தோற்றம், நியாயப்பிரமாணத்தினால் மாறிப்போய், பாவம் மிகுந்த பாவமுள்ளதாக ஆகி விடுகிறது.

*1கொரி 15:56 மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்.*

பலரும் நினைத்தார்கள், 'தேவன் நியாயப்பிரமாணத்தை தந்தது நாம் பாவத்தை மேற்கொள்வதற்காக' என்று. ஆனால் தேவன் நியாயப்பிரமாணத்தை கொடுத்தது **பாவம் நம்மை மேற்கொள்ள உதவி செய்வதற்காக.** இது எப்படி சாத்தியமாகும்? தேவனுடைய பரிசுத்தத்தின் நிலை மிக மிக உயர்ந்தது. நாம் நம்முடைய அனைத்து முயற்சிகளினாலும் அதில் ஒரு துளியை கூட எட்ட முடியாது. அதன் மூலம் தேவனுடைய தயவை பெற்றுக் கொள்ளலாம் என்பது முடியாத காரியம். தங்கள் நல்ல கிரியைகளினால் தேவனுக்கு பிரியமான நிலையை எட்டி விடலாம் என்று பலரும் நினைக்கிறார்கள். அது முடியாது. நாம் இயேசுவை போல நல்லவர்கள் அல்ல என்றால், நாம் செய்ய வேண்டியது அவர் மேலும் அவர் நமக்காக தருகிற நீதிகரணத்தின் மேல் விசுவாசம் வைப்பது மாத்திரமே. இப்படி மனிதன் இருக்கின்ற நம்பிக்கையற்ற நிலமையை, அவனுக்கு புரிய வைத்து, அவனை தன் சுய நீதிகரணத்தில் இருந்து விடுபட வைப்பது எப்படி?...... தேவன் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார். தன்னிடம் இல்லாத எதையும் இச்சிப்பது மனித சுபாவம் ( பாவ மனித சுபாவம். மறுபடியும் பிறக்காத சுபாவம் ). எனவே "இச்சியாதிருப்பாயாக" *( யாத்;20;17 )* என்று நியாயப்பிரமாணம் சொன்ன உடன், நமக்கு தேவை இல்லாத எல்லாவற்றையும் இச்சிக்க ஆரம்பிக்கிறோம். நாம் பரிபூரணமானவர்கள் அல்ல என்று நமக்கு தெரியும். என்றாலும் தேவனுடைய நோக்கம், நாம் நல்லவர்கள்தான் என்ற பொய்யில் இருந்து நம்மை வெளியேற்ற வேண்டும் என்பதே. அதனால் தான் நியாயப்பிரமாணம் சொன்னது " நீ பரிபூரணமாக இருக்க வேண்டும்"

ஆச்சரியப்படத்தக்கதாக, மதத்தின் வழியாக, சாத்தான் மக்களை நியாயப்பிரமாணத்தை பிடித்துக்கொள்ள செய்கிறான். எனவே 'நியாயப்பிரமாணம் பாவம் செய்வதை விட்டு விடுவதற்கு உதவி செய்யும்' என்று பலரும் இதன் மூலம் நினைக்கிறார்கள். ஆனால் பவுல் அப்போஸ்தலன் இதற்கு நேர் எதிராக சொல்கிறார். மக்கள் விபசார பாவத்தில் விழ வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், " விபசாரம் செய்யாதிருப்பாயாக, பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக *( யாத்; 20;14,17 )* என்று வல்லமையாக

தொடர்ந்து பிரசங்கியுங்கள். இதைப்பற்றி இதற்கு முன்பு வரை ஒரு நினைவும் இல்லாதவர்கள் கூட விபசாரம் செய்ய இச்சிக்க ஆரம்பிப்பார்கள். **இந்த நோக்கத்தோடுதான் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது.**

*கலா 3:19 அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது.*
நம் பாவத்தை பெரிதாக காண்பிப்பதற்காக *( ரோமர்; 5;20, 7;11 )* நியாப்பிரமாணமானது, வாக்குத்தத்த உடன் படிக்கையுடன் *( கலா; 3;17,18 )* கூட்டப்பட்டது. இதன் மூலமாக, நம்மை நாமே ரட்சித்துக்கொள்ளலாம் என்ற எந்த விதமான தப்புகணக்கையும் நாம் போக்க வேண்டும் என்பதற்காக. இது, **'சுயமாக ரட்சிக்கப்பட நமக்கு ஒரு வழியும் இல்லை'** என்று நம்மை புரிந்து கொள்ள வைத்து, கிருபையின் உடன்படிக்கையை *( கலா; 3;24 )* எதிர்நோக்கும்படியாக செய்கிறது. வாக்குத்தத்தத்தை பெற்ற சந்ததி - ஆபிரமாமின் உண்மையான சந்ததி - இயேசு கிறிஸ்து *( கலா;3;16 )* வருமளவும் நியாயப்பிரமாணம் வல்லமையாக உபயோகத்தில் இருக்கும்படியாக உள்ளது.

*கலா 3:23 ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின்கீழ் காவல்பண்ணப்பட்டிருந்தோம்.*
*24 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.*
**"விசுவாசம் வருகிறதற்கு முன்னே".** இந்த விசுவாசம் 22ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **"இயேசுகிறிஸ்துவின் விசுவாசம்".** மனிதன் எப்போதும் விசுவாசத்தினாலேயே ரட்சிக்கப்படுகிறான். ஆனால் அந்த விசுவாசத்தின் குறிக்கோள் பலவிதமானதாக இருந்தது. 25ம் வசனம் சொல்லுகிறது **"விசுவாசம் வந்த பின்பு".** அதாவது, ரட்சிக்கப்படுவதற்காக இயேசுகிறிஸ்துவின் மேல் வைக்கிற விசுவாசத்தை புரிந்து கொண்ட பிறகு.
இயேசுவின் மேல் உள்ள, ரட்சிக்கப்படுவதற்கான விசுவாசம், வெளிப்படுவது வரை, நாம் " நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம்". அதாவது நியாயப்பிரமாணம் என்கிற ஜெயில் அதிகாரி நம்மை ஆக்கினைத்தீர்ப்பு, குற்ற உணர்வு இவைகளின் கீழ் சிறைப்படுத்தி வைத்திருந்தார். நாம் எப்போதும் பாவ உணர்வு உள்ளவர்களாக, நம்மையே பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால், இயேசுவின் மேல் உள்ள விசுவாசம் மாத்திரமே, இந்த சிறைப்பிடித்தலில் இருந்து நம்மை விடுவிக்கின்ற திறவு கோலாக இருக்கிறது. *( 1 கொரி; 15;56-57 ).* நம்முடைய சொந்த முயற்சிகளால் ரட்சிப்பை பெற்றுக்கொள்வதை தடுக்கின்ற ஒரு தடையாக நியாயப்பிரமாணம் இருந்தது. அதன் அளவு மிக உயரமாக இருக்கின்றதால் ஒருபோதும் நம்மால் அதை தாண்டி செல்ல முடியாது. நாம் தடுக்கப்பட்டவர்களாக, அடைக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். அதை தாண்டி செல்ல ஒரே வழி உயரே இயேசுவை நோக்கி உதவி கேட்பதே.

*கலா 3:24 நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது."*
இங்கே **"உபாத்தி"** என்ற வார்த்தையின் மூல கிரேக்க வார்த்தை **" பைடகோகஸ் "** என்பதாகும். அந்த வார்த்தையின் அர்த்தம் " ரோமர், கிரேக்கரது வீடுகளில் உள்ள குழந்தைகளை பராமரித்து, அவர்களை பள்ளிக் கூட வாத்தியாரிடத்தில் அழைத்து சென்று வருகிற ஒரு வேலையாள்". எனவே நியாயப்பிரமாணது இயேசு வரும்வரை நம்மை ஒழுங்காக பராமரித்து வந்த வேலையாள்.
நியாயப்பிரமாணம் நம்மை பரிசுத்தத்துக்குள்ளாக துரத்தி, சுயமாக நாம் ரட்சிக்கப்பட முடியாது என்று காண்பித்தது. இது நம்மை, "இயேசு கிறிஸ்து, ரட்சிப்பை ஒரு ஈவாக நமக்கு தருகிற செய்திக்கு தயாராக்கியது ". நியாயப்பிரமாணத்தின் அடக்குமுறையை முழுமையாக அறிந்து கொண்டவர்களால் மாத்திரமே, இயேசு கிறிஸ்துவின் ஈவாகிய மீட்பை பாராட்ட முடியும்.

*எபி 10:1 இப்படியிருக்க, நியாப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது.*
*2கொரி 3:7 எழுத்துகளினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக்கூடாதிருந்தார்களே. ( 2 கொரி;3;7-11.)*

*எபே; 2;15. சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,*

**நியாயப்பிரமாணத்தின் முழுமையான நோக்கம், "மனிதன் தன் சொந்த முயற்சிகளினால் தன்னை தான் ரட்சித் துக்கொள்ள முடியாது - உலகம் முழுவதற்கும் இயேசு கிறிஸ்து என்ற ரட்சகர் அவசியம்" என்பதை புரிய வைப்பதே.**

## 8. யாராலும் நியாயப்பிரமாணத்தை முழுமையாக கடைபிடிக்க முடியாது

நியாயப்பிரமாணத்தை முழுமையாக, எப்போதும் கடைபிடித்தது இயேசு கிறிஸ்து மாத்திரமே.
*யோவா 7:19 மோசே நியாயப்பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை; நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள் என்றார்.*
*அப் 7:53 தேவதூதரைக்கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள் என்றான்.*
*அப் 13:39 மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது.*

*கலா 3:11 நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. ( கலா;6;13; ரோமர்; 9;31 ).*

## 9. பத்து கட்டளைகள்

*2கொரி 3:7 எழுத்துகளினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக்கூடாதிருந்தார்களே. 8 ஒழிந்துபோகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்? 9 ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக்கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. 10 இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்குமுன்பாக மகிமைப்பட்டதல்ல. 11 அன்றியும் ஒழிந்துபோவதே மகிமையுள்ளதாயிருந்ததானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே.*

மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர் அல்ல என்பதை வேதாகமம் தெளிவாக சொல்லியிருக்கிறது. ஆனாலும் சில நியாயப்பிரமாண போதகர்கள் வேதாகமத்துக்கு கீழ்ப்படியாமல், அல்லது அறியாமையினால், அல்லது தந்திரமாக "நியாயப்பிரமாணம் என்பது சடங்காச்சார சட்டங்களை குறிக்கிறது, அவைகளை நாம் கைக்கொள்ள வேண்டியது இல்லை; ஆனாலும் பத்துக்கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்பட்டவர்கள். அவைகளை கைக்கொள்ளாவிட்டால் அவற்றின் தண்டனைக்கும் சாபத்துக்கும் உட்படுவோம்" என்று போதிப்பது உண்டு. ஆனால் இங்கே பவுல் தெளிவாக சொல்லுகிறார், நியாயப்பிரமாணம் என்பது பத்துக்கட்டளைகளையும் சேர்த்தே குறிப்பிடுகிறது. **"எழுத்துக்களினால் எழுதப்பட்டு கற்களில் பதிக்கப்பட்டிருந்த மரணத்துக்கேதுவான ஊழியம் "** பத்துக்கட்டளைகளையே குறிக்கிறது.

ஒரு விசுவாசி நிச்சயமாக பத்துக்கட்டளைகளையும் தன் வாழ்வில் கைக்கொண்டு நடக்க வேண்டும். பத்துக்கட்டளைகளை மாத்திரம் அல்ல, எல்லா கட்டளைகளையும் கைக்கொண்டு நடக்க வேண்டும். அது நல்லது. ஆனால் புது உடன்படிக்கையின் கீழ் ( அதிக மகிமை உள்ள ஊழியம் ) வந்திருக்கும் ஒருவர் பத்துக் கட்டளைகளின் சாபங்களுக்கும், தண்டனைகளுக்கும் ( மரணத்துக்கேதுவான, ஒழிந்து போகிற மகிமை உள்ள ஊழியம் ) கீழ்ப்பட்டவர் அல்ல. அவர் பத்துக்கட்டளைகளை கைக்கொள்வதால் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவது இல்லை; இயேசுவின் மேல் வைக்கும் விசுவாசத்தால் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார். *( எபே 2:15 ).* **தேவனால் ஏற்றுக்கொள்ளபட்டதனால் அவர் தானாகவே விரும்பி பத்துக்கட்டளைகளையும் மற்ற எல்லா கட்டளைகளையும் பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு கைக்கொள்வார்.**

## 10. இயேசு கிறிஸ்து நம்மை நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவித்திருக்கிறார்

*கலா 4:4 நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத் தக்கதாக, 5 காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.*

இயேசு ஒரு கன்னிகையிடம் பிறந்து, நியாயப்பிரமாணத்துக்கு முழுமையாக கீழ்ப்படுத்தப்பட்டார். அவருடைய பூலோக வருகை இரண்டு காரணங்களுக்காக.

**1. அவர் நியாயப்பிரமாணத்தின் கீழ்ப்பட்டவர்களை மீட்கும் படியாக வந்தார்.** நியாயப்பிரமாணத்துக்கு முழுமையாக கீழ்ப்படிந்து, உட்பட்டு, அதன் சாபங்களுக்கான விலையை கொடுத்து - இயேசு இதை செய்தார் *( மத்;5;17, கலா;3;13 ).* இப்படியாக இயேசு நம்மை முழுவதுமாக நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவித்தார். "மீட்பு" என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தையின் கிரெக்க வார்த்தை " எக்ஸகொரஸோ" என்பதாகும். அதன் அர்த்தம் "அடிமை சந்தையில் இருந்து விலைக்கு வாங்குவது".

**2. இயேசு நம்மை மீட்டு நமக்கு புத்திர சுவிகாரத்தை அதன் எல்லா உரிமைகளுடனும் பெற்று தந்தார்.** புத்திரர் என்றால், அதற்கான கிரேக்க அர்த்தம் வளர்ந்த புத்திரர். கிருபை யுகத்தில் நாம் குழந்தைகளாக அல்ல, வளர்ந்த புத்திரராக நடத்தப்படுகிறோம்.

எனவே நாம் நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்து மாத்திரம் மீட்கப்படவில்லை, சுவிகார புத்திரராக மீட்கப்பட்டிருக்கிறோம். பலரும் நாம் எதிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம் என்பதில் நின்று விடுகிறார்கள். அதில் நாம் சந்தோஷப்பட வேண்டும், என்றாலும் மேலே சென்று நம்முடைய புத்திர சுவிகாரத்தின் எல்லா நன்மைகளையும் அறிந்து கொள்ள வேண்டும் *( ரோ; 8;19 ).*

*கலா 3:13 மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.*

நியாயப்பிரமாணமானது, அதற்கு கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதத்தையும், கீழ்ப்படியாவிட்டால் சாபத்தையும் கொடுத்தது. ஒரு சிறிய மீறுதலும் சாபத்தை கொண்டு வந்தது. *( உபா; 28;15-68 ).* எனவே எல்லாரும் சாபத்துக்குட்பட்டவர்களே, எனென்றால் எல்லோரும் பாவம் செய்தவர்கள் *( ரோமர்; 3;23 ).* ஆனாலும் இயேசு நம்முடைய சாபங்களை ஏற்றுக்கொண்டு நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்டுக்கொண்டார். இப்போதும் நாம் எல்லோரும் ஏதாவது ஒரு விதத்தில் நியாயப்பிரமாணத்தை மீறிக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனாலும் இயேசுவினால், நாம் ஒருபோதும் தேவனிடம் இருந்து எந்த சாபத்தையும் பெற மாட்டோம். பவுல் *உபா; 21;23* ஐ மேற்கோளிட்டு, இயேசு எப்படி, நாம் மீறின நியாயப்பிரமாணத்துக்கான தண்டனையை பெற்று, சாபத்தை ஏற்றுக்கொண்டதால், நீதி நிறைவேற்றப்பட்டது என்று கூறுகிறார்.நமக்கு நியாயப்பிரமாணத்திலிருந்து ஒரு தண்டனையும் இல்லை, எனென்றால் நாம் இயேசுவுக்குள் மரித்தவர்கள். *(ரோமர்; 8;1).*

**"மீட்கப்பட்டோம்"** என்பதற்கு அர்த்தம் நியாயப்பிரமாணத்தின் சக்தியிலிருந்து மீட்கப்பட்டோம். நியாயப்பிரமாணத்தின் நீதிக்கான முழு விலையையும் இயேசு முழுமையாக கொடுத்தார். இப்போது நாம் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, இயேசுவோடு இணைக்கப்பட்டவர்களாக இருக்கிறோம் *(ரோமர்;7;4 ).* யூதர்களுக்கு எப்படி நியாயப்பிரமாணம் இருந்ததோ, அது போலவே நமக்கு இயேசு கிறிஸ்து இருக்கிறார். யூதர்கள் நியாயப்பிரமாணத்தையே நித்திய ஜீவனாக நினைத்தார்கள்.
*யோவா 5:39 வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே.*
நியாயப்பிரமாணத்துக்கு பதிலாக இயேசு தானே தேவனுடைய சித்தத்தின் முழுவெளிப்படாக ஆனார் *( எபி; 1;1-3 )*

*ரோம 8:2 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. 3 அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். 4 மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.*
தேவன் நம்முடைய ஆக்கினையை இயேசுவின் மேல் சுமத்தினதால், நியாயப்பிரமாணத்தின் நீதியை ஒரு ஈவாக நாம் பெற்றுக்கொள்கிறோம். இயேசு தான் படாத ஒரு கடனை கொடுத்து தீர்த்தார், எனக்கு நான் கொடுத்து தீர்க்க முடியாத ஒரு கடன் இருந்தது. இயேசு என்னுடைய பாவத்தையும் ஆக்கினைதீர்ப்பையும் பெற்றுக்கொண்டார், நான் அவருடைய நீதியை பெற்றுக்கொண்டேன்.

"ஆவியின் படி நடக்கிறவர்கள்" என்றால் நாம் எல்லா காரியங்களிலும் பரிசுத்தமாக, பரிபூரணமாக இருக்கிறவர்கள் என்பது அர்த்தம் அல்ல. நாம் தேவனுடைய வழிகளில் நடக்க தேடுகிறோம் என்று அர்த்தம். இதில் பல நிலைகள் உண்டு.
இவ்வசனம் சொல்லுகிறது, இயேசுவின் மரணமான பலியினால், நாம் இப்போது நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்ற முடியும்.
இதை இரண்டு வழிகளில் நாம் மனதிலாக்க முடியும்.
முதலாவது, நியாயப்பிரமாணத்தின் நீதி இப்போது நம்முடைய மறுபடியும் பிறந்த ஆவியில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது *( ரோ; 4;8 ).* இயேசு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி *( மத்;5;17 )*தன்னுடைய நீதியை நமக்கு தந்தார் *( ரோமர்;3;26 ).* ஒவ்வொரு விசுவாசியின் ஆவியும் நீதியாகவும் பரிசுத்தமாகவும் இருக்கிறது.
இரண்டாவது, நியாயப்பிரமாணம் கோருகிற செய்கைகளை நம்முடைய சுய பெலத்தால் செய்ய முடியாது. ஆனால் இப்போது பரிசுத்த ஆவியானவரால் அவைகளை செய்வதற்கு பெலப்படுத்தப்படுகிறோம்.
*எபே 2:15 சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,*
இயேசு நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபங்களில் இருந்து மாத்திரம் விடுவிக்காமல் *(கலா; 3;13),* நியாயப்பிரமாணத்திலுருந்தும் விடுவித்தார். *(ரோ;4;16, 6;14-15, 7;4-6, 8;2, 2 கொரி;3;7, கலா;2;19, 3;24-25, 4;21, 5;18, எபே; 2;14-15, கொலோ;2;14, 1 தீமோ;1;9, எபி;7;18-19, 8;7-13, எபி;10;8-9 ).* **நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ விரும்புவது, இயேசு இரத்தம் சிந்தி வாங்கித்தந்த விடுதலையை உதறித்தள்ளி விட்டு, மீண்டும் அடிமைத் தனத்துக்குள்ளாக செல்லுவது போன்றது.** இது இயேசுவில் நமது புதிய உடன்படிக்கையை புரிந்து கொள்ளாதது.

## 11. நியாயப்பிரமாண போதகர்கள்.

*ரோம 2:19 நீ உன்னைக் குருடருக்கு வழிகாட்டியாகவும்., அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு வெளிச்சமாகவும்,*
*20 பேதைகளுக்குப் போதகனாகவும், குழந்தைகளுக்கு உபாத்தியாயனாகவும், நியாயப்பிரமாணத்தின் அறி வையும் சத்தியத்தையும் காட்டிய சட்டமுடையவனாகவும் எண்ணுகிறாயே. 21 இப்படியிருக்க, மற்றவ னுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக்கூடாதென்று பிரசங்கிக் கிற நீ களவுசெய்யலாமா?*
*22 விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளை யிடலாமா? 23 நியாயப்பிரமாணத் தைக்குறித்து மேன்மைபாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறிநடந்து, தேவனைக்கனவீனம்பண்ணலாமா?*

யூதர்கள் எப்போதும் தங்கள் நியாயப்பிரமாணத்தை மேன்மைப்படுத்தி பேசுபவர்கள். ஆனாலும் ஒரு யூதனும் அதை முழுமையாக கடை பிடித்தது கிடையாது. *(மாற்;10;20). ரோமர்; 3;23).* யூதர்கள் தங்களுடைய பரிசுத்தத்தை மேன்மைபடுத்தி காட்டும் மூன்று இடங்களை, பவுல் எடுத்து அந்த மூன்று இடங்களிலும் அவர்கள் பாவிகள் என்று காட்டுகிறார்.
**யூதர்கள் தாங்கள் திருடுவதில்லை** என்று சொல்கிறார்கள். ஆனால் பவுல் சொல்லுகிறார் அவர்கள் திருடுகிறார்கள் என்று. இயேசு பரிசேயர்களை திருடர்கள் என்று கடிந்து கொண்டார். இது நாம் நினைக்கிற திருட்டு அல்ல, மேல் மட்டத்தில் நடைபெறுகிற திருட்டு. **அவர்கள் விபசாரக்காரர்கள்** என்று பவுல் சொல்லுகிறார். ஆவிக்குரிய விபச்சாரக்காரர்களாகவாவது அவர்கள் இருக்கிறார்கள் *(யாக்;4;4 ).* இயேசு *( மத்;5;28)* கூறுகிறார், மனதளவில் இருந்தாலும் அது விபச்சாரமே. அவர்கள் **விக்கிரக ஆராதனைக்காரர்கள் அல்ல** என்று சொல்பவர்கள். ஆனால் அப்.பவுல் அவர்களை கோவில்களை கொள்ளையிடுபவர்கள் என்று சொல்லுகிறார். இதன் மூலம் அவர்களது இச்சையை சொல்லுகிறார்; இது விக்கிரக ஆராதனையே. *( கொலோ; 3;5 )*

*1தீமோ 1:5 கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாய மற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே. 6 இவைகளைச் சிலர் நோக்காமல் வீண்பேச்சுக்கு இடங் கொடுத்து விலகிப்போனார்கள். 7 தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்ன தென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள். 8 ஒருவன் நியாயப் பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால், நியாயப்பிரமாணம் நல்லதென்று அறிந்திருக்கிறோம். 9 எங்களுக் குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல், அக்கிரமக்கார ருக்கும், அடங் காதவர்களுக்கும்*

*பக்தியில்லாதவர்களுக்கும் பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்ட வர்களுக்கும், தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலை பாதகருக்கும், 10 வேசிக்கள்ளருக்கும், ஆண்புணர்ச்சிக் காரருக்கும், மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்யருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும், 11 நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கிய மான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது.*

தேவ அன்பையே தங்கள் போதனையின் குறிக்கோளாக வைக்காமல் போதிக்கிறவர்கள் எப்போதும் நியாயப்பிரமாண போதனைக்குள் நழுவி விடுவார்கள். ஏனென்றால் **சாதாரண மனம் எப்போதும் நியாயப்பிரமாணத்தின் தண்டனையையே புரிந்து அதை பிடித்துக்கொண்டு இருக்கும்**. நியாயப்பிரமாண போதனை என்பது, வெளிவேஷமாக அல்லது மாம்சப்பிரகாரமாக நற்கிரியைகளை செய்வதற்கு, மற்றவர்களை ஊக்குவிப்பது ஆகும். **இதன் சுருக்கம்; நீ தவறு செய்தால், தேவன் உன்னை தண்டிப்பார்.** அதற்கு மாறாக, கிருபையினால் வெளிப்படுத்தப்படுகிற தேவனுடைய அன்பை மனதிலாக்க வேண்டுமென்றால் அதற்கு பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடு அவசியமாகும் *( 1 கொரி; 2;14 ).* எனவே மாம்சப்பிரகாரமான போதகர்கள், மாம்ச பிரகாரமான வழிகளை உபயோகித்து மக்களை அடக்கி வைக்கிறார்கள்.

நியாயப்பிரமாணத்தின் படி நடப்பதன் மூலம் மாத்திரமே தேவனோடு நல்லுறவு வைத்திருக்க முடியும் என போதிக்கிறவர்களுக்கு, தாங்கள் என்ன சொல்லுகிறோம் என்று தெரியாது. மற்றவர்கள் நியாயப்பிரமாணத்தின் படி நடக்க வேண்டும் அப்போதுதான் தேவன் உங்களை ஏற்றுக்கொள்வார், என போதித்து விட்டு அவர்களே நியாயப்பிரமாணத்தின் படி நடப்பது இல்லை. எல்லோரும் பாவம் செய்து, நியாயப்பிரமாணத்தின் படி நடந்தது இல்லை. *(ரோமர்; 3;23 ).* தாங்கள் என்ன சொல்லுகிறோம் என்று அவர்கள் மனதிலாக்கினால் அவர்கள் அவ்வாறு சொல்வதை விட்டு விடுவார்கள். யாராலும் நியாயப்பிரமாணத்தின் படி நடக்க முடியாது. எனவே அதற்காக நியாயப்பிரமாணம் கொடுக்கப்படவில்லை. தேவனுடைய மகா பரிசுத்த நிலையை நம் முயற்சிகளால் ஒருபோதும் அடைய முடியாது என்று காண்பிக்கவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. இதன் மூலமாக நாம் நம் சுய நீதிகரண முயற்சிகளை விட்டுவிட்டு, தேவனுடைய ஈவாகிய தேவனுடைய நீதியில் சார்ந்திருக்க வேண்டும், என்பதே இதன் நோக்கம். இன்னும் இதை அறியாமல், தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு, நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்க வேண்டும் என்று சொல்பவர்கள், முழுமையாக இந்த நோக்கத்தை தவற விட்டு விட்டார்கள்.

## 12. நாம் நியாயப்பிரமாணத்தை அனுசரிப்பதால் நீதிமான்களாக்கப்படுவதில்லை..... இயேசுவின் மேல் வைக்கும் விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்படுகிறோம்.

*அப் 13:39 மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது.*

நீதிகரணம் என்பது, தேவனுக்கு முன்பதாக முழுமையாக நம்மை நீதிமான்களாக ஆக்குகிற தேவனுடைய செயல். இதை செய்வதற்காக, தேவன் நம்முடைய பாவங்களை மன்னிப்பது மாத்திரமல்லாமல் அவருடைய நீதியையே நமக்கு தருகிறார். இதன் மூலமாக **" ஒரு போதும் பாவமே செய்யாதவர்களைப்போல** “ நாம் இருக்கிறோம். இயேசு கிறிஸ்து மூலமாக, தேவன் நம்மை இந்நிலையில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

*ரோம 10:4 விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.*

இவ்வசனத்தின் அர்த்தம் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவு என்பதல்ல. **நீதிகரணத்துக்காக, நியாயப்பிரமாணம் நம்மை நோக்க செய்கிறவராக இயேசு இருக்கிறார்** . இதன் அர்த்தம் இப்போது யாரும், எவ்வளவுதான் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படிந்தாலும் தேவனுக்கு முன்பாக நீதிமான் ஆக முடியாது. இது விசுவாசிப்பவர்களுக்கு மாத்திரமே. விசுவாசிக்காதவர்களுக்கு இன்னும் நியாயப்பிரமாணம் உபயோகத்திலேயே உள்ளது. *( யோவான்;3;36 ).* இயேசுவை விசுவாசிக்காத ஒருவர், நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு மீறுதலுக்கும் பதில் சொல்லியாக வேண்டும்.

*ரோம 3:20 இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. 21 இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது 22 அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. 23 எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, 24 இலவசமாய் அவருடைய கிருபை யினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; 25 தேவன் பொறுமை யாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், 26 கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரை யே ஏற்படுத்தினார். 27 இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத் தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயா? அல்ல; விசுவாசப்பிரமாணத்தினாலேயே. 28 ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கி றோம். 29 தேவன் யூதருக்குமாத்திரமா தேவன்? புறஜாதிகளுக்கும் தேவனல்லவா? ஆம் புறஜாதிகளுக்கும் அவர் தேவன்தான். 30 விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதனமில்லாதவர்களை விசுவாசத்தின் மூலமாயும் நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே. 31 அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல; நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே.*

பரலோகம் போக வேண்டும், தேவனுடய ராஜ்யத்தில் - அவருடைய பிரசன்னத்தில் இருக்க வேண்டும் என்றால் ஒரு மனிதனுக்கு தேவனுக்கு இணையான நீதி இருக்க வேண்டும். மனிதன் யாரும் முழுமையாக நியாயப் பிரமாணத்தையும், கட்டளைகளையும் -

வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ கடைபிடித்தது கிடையாது. அனால் நாம் பரலோகம் செல்லவும், தேவனால் எற்றுக்கொள்ளப்படவும் தேவனுக்கு இணையான நீதி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
தேவனுக்கு இணையான நீதி உள்ள மனிதர் யாருமே கிடையாது. தேவனுக்கு இணையான நீதி ஒரே ஒரு மனிதருக்கு மாத்திரமே உண்டு..அவர் இயேசு கிறிஸ்து..... நீதியில் இரண்டு வகையான நீதி உண்டு. ஒன்று **"மனிதனுடைய நீதி"** மற்றொன்று **"தேவனுடய நீதி".** மனிதனுடைய நீதி என்பது – "ஒரு மனிதனுடைய உயர்ந்த , நல்ல பழக்கங்களும், அவன் செய்கிற நல்ல செயல்களும் ஆகும். உலகத்தின் எல்லா மதங்களும் சொல்வது - நீ பல காரியங்களை, கட்டளைகளை செய்ய வேண்டும் நிறைவேற்ற வேண்டும். அப்போது உன் தெய்வம் உன்னை ஏற்றுக்கொள்வார்".
சுவிஷேஷம் என்ற வார்த்தையின் அர்த்தம் **" நற்செய்தி "**. இந்த சுவிஷேஷத்தின் நற்செய்தி என்னவென்றால் " **இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் நமக்காக, நம் பாவங்களுக்காக மரித்து - நியாயப்பிரமாண நீதிக்கு சமமான நீதியை நமக்கு சொந்தம் ஆக்கினார். இந்த நீதி தேவனுடைய நீதி...இது இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தால் வருகிற நீதி. இது இயேசுவை விசுவாசிக்கிற எவருக்கும் கிடைக்கிற நீதி.**

*ரோம 5:17 அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே.*
*ரோம 3:28 ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்.*
*கலா 2:16 நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே.*
*கலா 2:21 நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.*
*கலா 5:4 நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள். பிலி;3;9.*
*ரோம 4:4 கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும். 5 ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.*

**சுருக்கமாக சொன்னால், "நம்முடைய நற்கிரியைகளினால் நாம் நீதிமான் ஆவது இல்லை. நாம் நீதீமான் ஆக்கப்பட்டதால் நற்கிரியைகள் செய்ய வேண்டும்".**
**"நாம் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை, தண்டனைக்கு பயந்து கைக்கொள்ளுவதால் இரட்சிக்கப்படுவது இல்லை; நாம் இரட்சிக்கப்பட்டதனால் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை அன்பாக கைக்கொள்ள வேண்டும்"**

## 13. நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழுவதால் உள்ள பிரச்சனைகள்

எல்லாவற்றிலும் குற்றவாளி; *யாக் 2:10 எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்.*
**பாவம் நம்மை மேற்கொள்ளும்;** *ரோம 6:14 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.*
**தேவனுடைய கோபாக்கினைக்குட்படுதல்**; *ரோம 4:15 மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது, நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை.*
ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாக இருப்பது; *ரோம 3:19 மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்.*
நீதிமானாக வாழ முடியாது; *ரோம 3:20 இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.*

## 14. நாம் கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள்

கிருபை என்ற வார்த்தையின் மிக எளிதான அர்த்தம் " **தகுதியற்றவர்களுக்கு கொடுக்கப்படுகிற தயவு** ". இதன் அர்த்தம் என்னவென்றால், தேவன் நமது நலனுக்கான எல்லாவற்றையும் செய்ய தீர்மானித்திருக்கிறார், அவ்வாறே செய்து கொண்டும் இருப்பார் - நமக்கு அதற்கான யோக்யதை இருந்தாலும் இல்லாவிட்டாலும், நாம் என்ன செய்திருந்தாலும்.". இதில் அடங்கி இருப்பவைகளில் சிலவற்றை இப்போது பார்ப்போம்.
ரட்சிப்பு; தேவனுடன் நித்தியமாக, நெருக்கமான உறவு.
இந்த ரட்சிப்பில் உள்ளடங்கி இருப்பவை...

அ. பாவ மன்னிப்பு; ( *யோவா 3:16 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். 17 உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.*
*யோவா 17:3 ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.*
*1யோவா 1:9 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*

**ஆ. குணமடைதல்.** *1பேது 2:24 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.)*

**இ. செழிப்பு;** *2கொரி 8:9 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.*

*2கொரி 9:8 மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.*

*3யோவா 1:2 பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன;.)*

**உ. விடுதலை;** ( *கலா 1:4 அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்;* )

**ஊ. நீதி;** ( *ரோம 5:17 அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே.)*

*1கொரி 1:30 அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக,*

*2கொரி 5:21 நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.)*

மேற்குறிப்பிடப்பட்டவைகள் கிருபைக்குள் அடங்கி இருக்கின்றவற்றின் நீண்ட பட்டியலின் தொடக்கம் மாத்திரமே. அப்.பேதுரு குறிப்பிடுவது போல **தேவன் தன் கிருபையினால் நமக்கு, ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் தந்திருக்கிறார்.**

*2பேது 1:2 தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. 3 தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, 4 இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*

### தேவனுடைய கிருபையின் கீழ்ப்பட்டவர்கள் என்பதன் அர்த்தம் என்ன ?

நம்முடைய பாவங்களுக்கு தக்கதாக நாம் பெற்றுக்கொள்ள வேண்டியதை பெற்றுக்கொள்ளாமல், இயேசுகிறிஸ்து மூலமாக தேவனுடைய உன்னதமானவைகளை பெற்றுக்கொள்கிறோம். நீதிகரணம், தேவனால் ஏற்றுக்கொள்ளப் படுதல், பாவ மன்னிப்பு எல்லாம் நம்முடையவைகள் ( இவை எல்லாம் தேவனுடைய கருணையால் இலவசமான பரிசுகளாக கிடைக்கின்றன ).

நம்முடைய கிரியைகளினால் எல்லாவற்றையும் தவறு இன்றி தேவனுக்கு பிரியமாக செய்ய முயற்சிக்கும்போது, எப்படியும் சிலவற்றில் நாம் தவறுவது இயற்கை. அப்போது நாம் தோற்றவர்களைப்போல ஆகிவிடுவோம். நியாயப் பிரமாணத்தின் கீழ் வாழுவது இப்படியே. இது, நாம் தவறு செய்யும் போதெல்லாம் நம்மை தண்டிக்கிற ஒரு எஜமானனின் கீழ் வாழுவது போன்றதாகும். நாம் கூடுதலாக முயற்சிக்கும்போது கூடுதலாக தவறு செய்கிறோம். இப்படிப்பட்ட ஒரு நிலமையில் இருந்து நம்மை விடுவிக்க ஒரு உதவி நமக்கு தேவைப்பட்டது.

தேவன் தன் கருணையினால் நமக்கு உதவியை அனுப்பினார்; அவர் பெயர்தான் இயேசு கிறிஸ்து. நம்மிடமே இருந்து நம்மை விடுவிக்கவும், தேவனுடைய நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள முயற்சிக்கிற நம் வலுவற்ற முயற்சிகளில் இருந்து நம்மை விடுவிக்கவும் - தேவன் இயேசு கிறிஸ்துவை அனுப்பினார். நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்க முடியாததால் நமக்கு கிடைக்க வேண்டிய தண்டனையை இயேசு ஏற்றுக்கொண்டார். அதனால் நாம் மரிக்க வேண்டிய அவசியமில்லாமல், விடுவிக்கப்பட்டவர்களாக இயேசுவோடு நித்திய ஜீவ வாழ்வு வாழுகிறோம். இயேசு நமக்கு நீதியாகிய ஈவை தந்தார், அதனால் நாம் நீதிமான்களாய், பரிசுத்தமாய் தேவனுக்கு முன்பாக இருந்து, நியாயப்பிரமாணத்தின் அனைத்து தேவைகளையும் சந்தித்தவர்களாக இருக்கிறோம். இயேசு தன் மரணத்தில், அடக்கத்தில், உயிர்த்தெழுதலில் நமக்காக செய்தவற்றின் மூலம், நாம் தேவனோடு சமாதானமாக இருக்கிறோம். நாம் சம்பாதிக்காத, நமக்கு தகுதி இல்லாத ஒரு அனுகூலம் தேவனிடம் நமக்காக இருக்கிறது. இது கிருபையாகும்.

இதை நம்பி, தேவன் தாம் நம்மை சிநேகிப்பதால் இதை செய்திருக்கிறார் என்று உணர்ந்து, நமது இதயம் ஒருவிதமான சந்தேகமும் இன்றி ஓய்ந்திருக்க வேண்டும். உங்கள் இதயத்தை, தேவனுடைய கிருபையில் ஊன்றப்பட்டதாக, நிலைத்திருப்பதாக, பதிந்திருப்பதாக, பாதுகாப்பாக இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். இதன் அர்த்தம், தேவன், இயேசு கிறிஸ்துவில், அவர் மூலமாக நாம் ஒரு பரிபூரண வாழ்க்கை வாழ்வதற்கான யாவற்றையும் தந்திருக்கிறார் - என்பதை சந்தேகத்திற்கிடமின்றி ஸ்தாபித்தவர்களாக இருங்கள்.

விசுவாசத்தை தொடக்குகிறவரும், முடிக்கிறவருமாகிய இயேசு கிறிஸ்துவையே நாம் நோக்க வேண்டும். மாறாக - நமது குறைவுகளில், தவறுகளில், பாவங்களில் நமது நோக்கத்தை வைப்போமானால் - நமது இதயம் கவலைப்பட்டு, நாம் தேவனிடம் இருந்து எதையாவது பெற்றுக்கொள்வோம் என்று நம்ப வலுவிழந்ததாக இருக்கும். நமது இதயத்தால் விசுவாசித்து, தேவனுடைய நீதியையும் கிருபையையும் பெற்றுக்கொள்கிறோம். நமது இதயங்கள் முழுமையாக தேவனுடையதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் திருப்தி அடந்தவர்களாக ஓய்வாக இருப்போம்.

*நீதி 4:23 எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.*

நாம் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல. **நியாயப்பிரமாணத்தின் கீழ் நாம் என்ன செய்கிறோம் என்ற அடிப்படையில் நாம் இப்போது தேவனோடு உறவு கொள்வது இல்லை. மாறாக இயேசு நமக்காக என்ன செய்தார் என்பதன் மேல் நமக்குள்ள விசுவாசத்தால் நாம் தேவனோடு உறவு கொள்கிறோம்.**

## 15. பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது

*ரோம 6:14 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.*

ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தில், ஒரு இடத்தை தவிர மற்ற இடங்களில் எல்லாம், **'பாவம்' 'பாவங்கள்'** போன்ற வார்த்தைகள் **" பாவத்தை நோக்கி சாயும் மனித இயல்பை "** விவரிக்கின்றன. அவைகள் தனிப்பட்ட ஒரு பாவச்செயலை குறிப்பிடுகிறவைகள் அல்ல. ஒரு விசுவாசிக்கு உள்ள போராட்டம் தனிப்பட்ட பாவச்செயல்களுடன் அல்ல, "பாவத்தை நோக்கி சாயும் இயல்புடன்". இந்த பாவம் செய்ய தூண்டுகிற இயல்பை உடைத்து விட்டால், செயல்கள் இருக்காது. இந்த போராட்டத்தை நாம் எவ்வளவு வல்லமையாக போராடுகிறோம் என்பதன் வெளிக்காட்டுதலே - நம் தனிப்பட்ட பாவச்செயல்கள்.

*ரோம 5:12 இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.*

இவ்வசனம் சொல்லுகிறது, பாவம் ( பாவத்தை நோக்கி சாயும் மனித இயல்பு - பாவம் செய்ய தூண்டுகிற சக்தி - பாவ சுபாவம் - பழைய மனிதன் ) ஆதாம் மூலமாக இந்த உலகத்தில் நுழைந்தது. இந்த "பாவ சுபாவமே" நம்மை பாவம் செய்ய தூண்டுகிறது. நம்முடைய பாவச்செயல்களால் நாம் பாவ சுபாவத்தை பெற்றுக்கொள்ள வில்லை. *( யோவான்; 8;44, ரோமர்; 7;9 ).*

நம்முடைய ரட்சிப்பின்போது, நம்முடைய பழைய மனிதன் அல்லது பாவ சுபாவம் இயேசுவோடு கூட சிலுவையில் அறையப்பட்டு மரித்துபோனது. *( ரோமர்;6;6)* ஆனாலும் இந்த பழைய மனிதன் உபயோகித்து விட்டுப்போன "நம்முடைய நினைவுகள், உணர்ச்சிகள் இருக்கின்றன. இவைகளில் பாவத்தை நோக்கி சாயும் இயல்பின் எஞ்சியவை இருக்கின்றது. **ஒரு விசுவாசியிடம் பாவம் செய்ய நிர்ப்பந்திக்கிற " பாவ சுபாவம் " இப்போது இல்லை.** அவர் செய்ய வேண்டியது எல்லாம் நினைவுகள், உணர்ச்சிகள் இருக்கின்ற மனதை புதிதாக்க வேண்டியதுதான். பாவ சுபாவம் - பழைய மனிதன் மரித்து போனான். ஆனாலும் அவன் உபயோகித்து விட்டு சென்ற நம்முடைய மனம், நினைவுகள், உணர்ச்சிகள் இவற்றில் " எஞ்சிய பழைய மனிதன் - பாவம்

உணர்ச்சிகள் இவற்றில் " எஞ்சிய பழைய மனிதன் - பாவம் செய்ய தூண்டுகிற இயல்பின் பழக்கம் " மீதி இருக்கும். **இந்த "பாவம்" பழைய மனிதன் விட்டு போனவைகள், நம்மை மேற்கொள்ள மாட்டாது.**

எப்படி என்றால், நியாயப்பிரமாணமானது குற்ற உணர்வை உருவாக்கி பாவத்தை வலுப்படுத்தியது. இந்த குற்ற உணர்வு நம்மை ஆக்கினைக்குள்ளாக தீர்த்து நம்மை கொன்று கொண்டிருந்தது. *(ரோமர்; 3;19).* நியாயப்பிரமாணம் நமது பாவத்து எதிராக தேவனுடைய கோபாக்கினையை கொண்டுவந்தது *( ரோம;4;15 ).* **ஆனால் இயேசு கிறிஸ்து நமது பாவத்துக்காக செய்த பிராயச்சித்தத்தை நாம் ஏற்றுக்கொண்டால், அதன் பிறகு தேவனுடைய கோபாக்கினைக்கு பயப்பட வேண்டிய அவசியமில்லை.** அந்த கோபாக்கினை இயேசுவின் மேல் வைக்கப்பட்டது. நம்மை கொல்லுகிறதற்கு, நம்மை குற்றப்படுத்துவதற்கு- நியாயப்பிரமாணமும் தேவை இல்லை. ஏனென்றால் நாம் ஏற்கனவே ரட்சிப்புக்காக இயேசுவிடம் வந்து விட்டோம் - அதற்காகத்தான் நியாயப்பிரமாணம் ஏற்படுத்தப்பட்டது.

**இந்த அறிவு ஒரு மனிதனை பாவம் செய்யுமாறு விடுவிக்காமல், பாவத்திலிருந்து விடுவிக்கிறது**. எந்த ஒரு விசுவாசியும் ஏதாவது ஒரு விதத்தில், அளவில் தொடர்ந்து பாவம் செய்வார்களாக இருக்கலாம். இது நாம் பாவம் செய்தே ஆக வேண்டும் என்பதனால் அல்ல, இன்னும் நாம் நமது மனதை தொடர்ந்து புதிதாக்கிக்கொண்டிருக்கி றோம் என்பதனால். அந்த சமயங்களில் எல்லாம், நமது பாவங்களால் குற்ற உணர்வோடு தேவனிடம் இருந்து பயந்து விலகி ஓட வேண்டியது இல்லை. மாறாக **"தேவனே இப்படி செய்து விட்டேன், எனக்கு உதவி செய்யும்"** என்று நம் அன்பின் தேவனை நோக்கி ஓடலாம்.

எனவே நாம் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல, கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள் என்று அறிந்து, உணர்ந்து, ஏற்று, அதன் படி நடப்பதே, நம் வாழ்க்கையில் பாவத்தின் அதிகாரத்தை உடைத்து வெற்றியோடு வாழுவதற்கான திறவுகோல். **இயேசு கிறிஸ்து தன் இரத்தத்தை சிந்தி நம்மை புதிய உடன்படிக்கையின் பங்காளிகளாக ஆக்கி இருக்கிறார். ஆனால் அதை அறியாமல், தெரியாமல், தெரிந்து கொள்ள முயற்சிக்காமல், போதிக்காமல் இன்னும் "பழைய உடன்படிக்கையாகிய" "நியாயப்பிரமாணத்தின் கீழ்" வாழுவது இயேசு கிறிஸ்துவையும் அவர் மனுக்குலத்துக்காக சிந்திய இரத்தத்தையும் உதாசீனப்படுத்துவது போல ஆகி விடும்.**

ஆகவே புதிய உடன்படிக்கையில், தேவனுடைய புத்திர சுவீகார பிள்ளைகளாக, இயேசுவுக்கு உடன் சுதந்திரர்களாக, வெற்றியோடு சாட்சியோடு வாழுவோம். மற்றவர்களையும் இந்த வாழ்வுக்குள் அழைப்போம்.

**"நம்முடைய நற்கிரியைகளினால் நாம் நீதிமான் ஆவது இல்லை. நாம் நீதீமான் ஆக்கப்பட்டதால் நற்கிரியைகள் செய்ய வேண்டும்".**

**"நாம் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை, தண்டனைக்கு பயந்து கைக்கொள்ளுவதால் இரட்சிக்கப்படுவது இல்லை; நாம் இரட்சிக்கப்பட்டதனால் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை அன்பாக கைக்கொள்ள வேண்டும்"**

**தேவனுடைய கிருபையில் - ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக, வெற்றி உள்ள விசுவாச வாழ்க்கை வாழுகிறவர்களாக இருங்கள்.**

**ஆமென்**

**சகோ. D.வெர்ஜின் குமார்.**

எந்த வித சந்தேகங்களுக்கும், பதில்களுக்கும் என்னை தொடர்பு கொள்ள விரும்பினால் உங்களை வரவேற்கிறேன். deeveekumar@yahoo.com

**இந்த வேதபாடம் தயாரிக்க உபயோகப்படுத்தப்பட்டவை;** டேக்ஸ் பையிள் கமெண்டரி, ஆன்ரு வாமக் பைபிள் கமென்ரி, வைன் புதிய ஏற்பாட்டு சொல் அகராதி, ஸ்டிராங் வேதாகம வார்த்தை விளக்கம், டான் க்ரோ சீஷனாக்கும் வேத பாடங்கள், ஆம்ப்லிபைட் வேதாகமம், லிவிங் வேதாகமம்..... இன்னும் பல..

------------------